# தகவல் பாலம்

## தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

# OUR LADY OF GOOD HEALTH PARISH

Volume 1, Issue 18 April 2023

### *PASTORAL STAFF:*

**Fr. Charles W. Collins**
*Pastor*

**Fr. Peter Gitendran**
*Residence*

**Maureen Rajadurai**
*Parish Secretary*

### *MASS SCHEDULE:*

| | |
|---|---|
| **Sundays:** | **12:30 pm & 4:30 pm** |
| **Tuesdays:** | **7:00 pm** |
| **First Fridays:** | **7:00 pm** |


### *ONLINE STREAMING SITES:*


**https://www.olghtamilparish.com/**
**https://www.facebook.com/OLGHTamilParish**
**https://www.youtube.com/olghtamilparish**
**OLGH TV (Eagle TV - 977 & Star TV 1450)**

### *OUR LADY OF GOOD HEALTH PARISH*

**131 Birchmount Road,**
**Scarborough, ON M1N 3J7**
***(Birchmount & Danforth Ave.)***

| | |
|---|---|
| **Phone:** | **416-264-OLGH (6544)** |
| **Fax:** | **416-264-6545** |
| **Email:** | **office@olghtamilparish.com** |
| **Website:** | **www.olghtamilparish.com** |




**நமக்காக பாடுகள் பட்டு, சிலுவை சுமந்து உயிர்விட்ட இயேசுவின் அன்பை அதிகமாக தியானிக்க, திருஅவையால் கொடுக்கப்படும் தவக்காலத்தில் தூய ஆவியின் அருளால் சுத்திகரிக்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட இதயங்களுடன் கடவுளாகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் கொண்டாடுவோம்** - திருத்தந்தை பிரான்சிஸ்

**ரொறன்ரோ அதியுயர் மறைமாவட்டத்தின் புதிய பேராயராகப் பொறுப்பேற்றிருக்கும் அதிவணக்கத்திற்குரிய பிரான்சிஸ் லீயோ அவர்களது நியமனத் திருப்பலியின்போது, புதிய பேராயர் வழங்கிய மறையுரையில், இளைய தலைமுறை குறித்த அவரது கருத்துக்களை இங்கே தமிழில் தருகிறோம்:**

“தலைமுறைகள் குறித்துப் பேசும்போது, இளைய தலைமுறையினரைப் பற்றி அவர்களிடமே பேசுவதற்கு என்னை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நான் எனது இறை சேவையில் பங்கில் பணியாற்றியபோது, நான் மிகவும் விரும்பி சேவையாற்றியது இளைய தலைமுறையினருடனேயே. இளையவர்கள் எமக்கும் எமது குடும்பங்களுக்கும் எமது சமூகத்திற்கும் கிடைத்த அரிய சொத்துக்கள். அதிக பலத்தையும், இலட்சிய வேட்கையையும், எதிர்காலத்திற்கான நம்பிக்கையையும் கொண்டுவருபவர்கள் இளையவர்களே. அவர்களுடன் இணைந்து கொள்வதும் அவர்களை அன்பு செய்வதும் மட்டுமன்றி, அவர்களை வரவேற்று, அவர்கள் சொல்வதைக் கேட்டு, அவர்களைப் பாராட்டி, அவர்களது செயல்களுக்கு சாட்சி பகர்வது அவசியம். இளையவர்ளோடு எமது நேரம், கவனிப்பு, வளங்கள் மற்றும் எமது மெய்யறிவையும் ஞானத்தையும் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

பாப்பரசர் எழுதிய கிறிஸ்துஸ் விவிற் என்னும் அவரது உபதேச அறிக்கையில், அவர் இவ்வாறு கூறுகிறார்: உங்களது கனவுகளையும் நம்பிக்கைகளையும் தொடர்ந்து பின்பற்றுங்கள். ஆனால் இந்த விடயத்தில் உங்களைத் தடுக்கக்கூடிய ஒரு சோதனை குறித்து எச்சரிக்கையாக இருங்கள். அந்த சோதனைதான் மன அழுத்தமும் கவலையும். வேகமான தீர்வுகள் கிடைக்கவில்லையென்றால், இந்த மன அழுத்தம் எமக்கு எதிராக வேலைசெய்து, எங்களது கனவுகளையும் எதிர்பார்ப்புக்களையும் கைவிடும் நிலைக்குத் தள்ளிவிடும். மிகச்சிறந்த எமது கனவுகளை சென்றடைவதற்கு நம்பிக்கை, பொறுமை மற்றும் அர்ப்பணிப்பே தேவை. இவை உடனடியாகக் கிடைப்பவை அல்ல. அதற்காக நாம் தயங்குவதோ, முயற்சிக்க அஞ்சுவதோ அல்லது தவறிழைத்து விடுவோமெனப் பயப்படுவதோ தேவையற்றது.
நீண்டகாலத்திற்கு முன்னர் எனது 18ஆவது வயதில் நான் குருமடத்தில் இணைவதற்கு விண்ணப்பித்த காலத்தில், எனது வீட்டின் சொந்தப் பங்கான தூய கொன்சொலட்டா அன்னை ஆலயத்தில் பல வருடங்களாக பீடப்பணியாளனாகப் பணியாற்றி வந்தேன். அப்போது எமது பங்கு, பல தியாக உள்ளம் கொண்ட குருக்களாலும், பல அற்புதமான மத ஊழியர்களாலும் நிரம்பியிருந்தது. குறிப்பாக எனக்கு ஞாபகமிருக்கிறது என்னவென்றால், மிகவும் உற்சாகமும் படைப்பாற்றலும் பெருந்தன்மையும் நிறைந்த எமது பங்குத்தந்தை அருட்திரு எர்மனிகில்டோ கிறெஸ்பி அவர்களைத்தான். இன்னுமொரு அன்பான குருவானவர் அருட்திரு லூஜி றெஸ்டா அவர்கள். அவரது ஆன்மாவும் இறைவனில் இளைப்பாறட்டும். ஒருநாள் எமது பங்கில் ஒரு திருப்பலிக்காக நாம் தயாராகிக் கொண்டிருந்தபோது, அருட்தந்தை என்னை அழைத்துக் கேட்டார்: நீர் ஒரு குருவாக வருவதற்காக குருமடத்திற்கு விண்ணப்பத்திருப்பதாக அறிகிறேன். இது மிகவும் மகிழ்ச்சி தரும் செய்தி. நான் மிகவும் பெருமையடைகிறேன். உங்கள் இளமைக் காலத்தை இறைவனுக்கு அர்ப்பணிப்பதைவிட அழகானது எதுவுமில்லை என்றார். அவர் இத்தாலிய மொழியில் கூறிய இந்த வார்த்தைகள் எனது இதயத்தில் இன்றுவரை இளமையாக இருக்கிறது.

எனவே, இன்று இங்கு வந்திருக்கின்ற மற்றும் இந்த உயர் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து இளைய தலைமுறையினரிடமும் நான் விடுக்கும் கோரிக்கை இதுதான்: இந்த உலகத்தைப் பார்த்துப் பயப்படாதீர்கள். உங்களது வாழ்க்கையில் மற்றவர்களுக்காகப் பணிபுரியப் பயப்படாதீர்கள். இந்த உலகை மாற்றுவதற்காக மிகப்பெரிய கனவுகளைக் காணப் பயப்படாதீர்கள். இயேசுக்கும் அவரது நற்செய்திக்கும் உங்களை அர்ப்பணிக்கப் பயப்படாதீர்கள். ஆலயத்தை நேசிக்கவும், ஆலய விடயங்களில் பங்காளராக மாறுவதற்கும், துணிவுடன் நல்ல பண்புகளை வாழ்ந்து காட்டுவதற்கும் பயப்படாதீர்கள். கடவுளுக்கு உங்கள் இளமைக் காலத்தை வழங்குவதற்குப் பயப்படாதீர்கள். ஆலயத்துடன் இணைந்திருப்பதுடன், அதன் செயற்பாடுகள் மற்றும் கட்டமைப்புக்களில் நெருக்கமாகப் பணியாற்றுங்கள். உங்களது பாடசாலையிலும் வீட்டின் சுற்றுச்சூழலிலும், ஏனைய சமூகத் தேவைகளிலும், இணைந்து பணியாற்றுங்கள், உங்கள் திறமைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்களிடமிருக்கும் திறமைகளைக் கண்டுபிடியுங்கள். உங்கள் வாழ்வில், இறைவனின் திட்டமான, உண்மையான இறை அழைத்தலை உங்களுக்கு வெளிப்படுத்துமாறு இறைவனிடம் கேளுங்கள். உங்கள் இதயத்தில் இயேசுவை அனுமதியுங்கள், தேவதாயார் உங்கள் கரங்களைப் பற்றி அழைத்துச் செல்ல அனுமதியுங்கள்.”

“Speaking of new generations, allow me to speak to and about the **Young people**. Again, a ministry I thoroughly loved during my years in parish ministry. The youth are a gift to us, to our families, our communities of faith and to the

wider society. Youth bring strength, idealism and hope for the future. They are to be loved and accompanied, listened to and cherished, welcomed and witnessed to. We need to give them our attention, our time, our means and our wisdom.

The Holy Father wrote in his exhortation *Christus Vivit*: "*Keep following your hopes and dreams. But be careful about one temptation that can hold us back. It is anxiety. Anxiety can work against us by making us give up whenever we do not see instant results. Our best dreams are only attained through hope, patience and commitment, and not in haste. At the same time, we should not be hesitant, afraid to take chances or make mistakes*" (142).

I remember long ago when I was 18 years old and had just applied to enter the seminary. I was an altar server for many years at my home parish, Our Lady of Consolata. Our parish was staffed by many dedicated pastors of souls, dynamic missionaries. I remember especially the energy, creativity and generosity of the pastor, Father Ermenegildo Crespi, IMC. Another loving priest was Father Luigi Testa, IMC, God rest his soul too. One day as we were ready to begin Holy Mass, he stopped me at the sacristy door and said to me: "*I heard that you asked to enter the seminary and become a priest. This is very good. I am proud of you. There is nothing more beautiful than to give your youth to the Lord*". These words have remained deep inside of me and have never left my heart. In Italian, I can still hear him say: "*Non c'è niente più bello che dare la tua gioventù al Signore.*"

So, **I appeal to the young people here this morning and throughout the Archdiocese**: Do not be afraid of the world. Do not be afraid to give of your life in service for others. Do not be afraid to dream big dreams and to want to transform the world. Do not be afraid to commit to Jesus and to his Gospel. Do not be afraid to love the Church, to be an integral part of her witnessing and to live a life of heroic virtue. Do not be afraid to give your youth to the Lord. Stay close to the parish Church and to the movements and associations of and in the Church. Get involved in the local realities of school, neighborhood and other social needs, Share your talents. Discover your giftedness. Ask the Lord to reveal to you his will for your life, your authentic vocation. Reach out to others, let Jesus into your heart and allow Mother Mary to take you by the hand."

---

### தூய அந்தோனியார் விசேட நவநாட்கள்

சித்திரை 11 முதல் ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் இரவு 7:00 மணிக்கு பெருவிழாவிற்கான ஆயத்த நவநாள் வழிபாடும் திருப்பலியும் நடைபெறும்.




### தூய அந்தோனியார் பெருவிழா - ஆனி 13

செவ்வாய்கிழமை ஆனி 13, இரவு 7:00 மணிக்குத் தூய அந்தோனியார் பெருவிழா திருப்பலியும், திருச்சுரூப பவனியும், திருச்சுரூப ஆசீரும் இடம்பெறும்.

---

### முதல் வெள்ளி - நற்கருணை வழிபாடு

இரவு 7:00 மணிக்கு நற்கருணை வழிபாடும் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும்

---

### திருமுழுக்கு அருட்சாதனம்

எமது பங்கில் தமது பிள்ளைகளுக்கு திருமுழுக்கு அருட்சாதனத்தை பெற்றுக்கொள்ள விரும்புகின்ற பெற்றோரும் ஞானப்பெற்றோரும் சித்திரை 14

வெள்ளிக்கிழமை மாலை 6:00 மணியிலிருந்து 8:00 மணிவரை நடைபெறவிருக்கின்ற வகுப்பில் கலந்துகொள்ளுதல் அவசியமானது. அன்று திருமுழுக்கிற்கான திகதிகள் வழங்கப்படும்.

## உறுதிபூசுதல் அருட்சாதனம்

ஆனி 17ம் திகதி சனிக்கிழமை உறுதிபூசுதல் வழங்குவதற்கான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. அதில் பங்குகொள்ள விரும்பினால் பங்கு அலுவலத்தைத் தொடர்புகொள்ளவும்.

## நற்கருணை அருட்சாதனம்

ஆனி 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4:30 மணி திருப்பலியில் முதல் தேவநற்கருணை வழங்குவதற்கான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. அதில் பங்குகொள்ள விரும்பினால் பங்கு அலுவலத்தைத் தொடர்புகொள்ளவும்.

## திருமண அருட்சாதனத்தில் இணைந்துகொள்ள விரும்புகிறீர்களா?




## தேவ அழைத்தல்

எம் குடும்பங்களில் தேவ அழைத்தல் உருவாக முயற்சி எடுப்போம், அதற்காக செபிப்போம். பீடத்தை அலங்கரிக்கும் குருக்களாக அல்லது டீக்கன்களாக எமது பிள்ளைகளும் உருவாக உற்சாகம் கொடுப்போம். அழைத்தலின் விளைநிலம் குடும்பமே. அழைத்தலுக்கான ஆர்வத்தை பிள்ளைகளிடம் உருவாக்குவது பெற்றோரே. உங்கள் பிள்ளையிடம் இதற்கான ஆர்வம் இருப்பதாக நீங்கள் உணர்ந்தால், என்னைத் தொடர்பு கொள்ளுங்கள

## குடும்பங்களைப் பதிவுசெய்தல்

ரொறன்ரோ அதியுயர்மறைமாவட்ட வழக்கப்படி திருமுழுக்கு, திருமணம் போன்ற திருவருட்சாதனங்களைப் பெற்றுக்கொள்ள கத்தோலிக்க பங்கு ஒன்றில் பதிவு செய்வது அவசியமானது. எமது தமிழ் கத்தோலிக்க பங்கில் உங்களது குடும்பங்களையும் பதிவு செய்துகொள்ள மறக்காதீர்கள்.

## இளையவர் குழுவைப் பலப்படுத்துவோம்!

தூய ஆரோக்கிய அன்னைப் பங்கின் எதிர்காலம் எமது இளையவர்கள், மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே, உங்கள் குடும்பத்திலுள்ள இளையவர்களை எமது பங்கின் செயற்பாடுகளிலும் வழிபாடுகளிலும் வளர்ச்சியிலும் ஈடுபாடும் அக்கறையும் கொள்வதற்கு ஊக்கம் கொடுப்பது, பெற்றோராகிய உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது.

எமது இளைஞர் குழு, தற்போது மிகுந்த அக்கறையுடனும் எழுச்சியுடனும் தங்களுக்குள் சிறந்த தொடர்புகளைப் பேணி மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகிறார்கள். எமது இளையவர்களுக்கு நாம் இன்னும் அதிக வாய்ப்புக்களை அனைத்துப் பணிகளிலும் வழங்க முன்வரவேண்டும். எமது ஆலயத்தின் வளர்ச்சி, இவர்கள் கையிலேயே தங்கியுள்ளது என்பதை மறக்காதீர்கள். எமது பங்கின் பணிப்பீடங்களைப் பலப்படுத்துவோம். குடும்பமாக இணைந்து எமது பங்கை வளர்ப்போம் வாருங்கள்.




## தாயகத்தில் வடக்கு கிழக்கு மறைமாவட்டங்களுக்கூடான நிதியுதவி

**இலங்கையின் பொருளாதார பின்னடைவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமுகமாக ரொறன்ரோ அதியுயர் மறைமாவட்டத்தின் அனுமதியுடன் சித்திரை 23. வைகாசி 14 திகதிகளில் நடைபெறுகின்ற ஞாயிறு திருப்பலிகளில் விசேட நிதி சேகரிப்பு இடம்பெறும். ஆதில் உங்கள் ஒவ்வொருவரினதும் தாராள ஒத்துழைப்பை வேண்டிநிற்கின்றோம்.**